**நுவரெலிய மாவட்டத்தின் 22 கமநல சேவை செயற்குழுக்கள் - 2024**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

**1.1** நுவரெலிய மாவட்டத்தின் 22 கமநல சேவை செயற்குழுக்களின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயலாற்றுகை கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுடன் தொடர்புடைய தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களிற்குரிய குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினது மற்றும் 2000 இன் 46 இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** நுவரெலிய மாவட்டத்தின் 22 கமநல சேவை செயற்குழுக்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட 22 கணக்காய்வு அறிக்கைகளில் 21 செயற்குழுக்களிற்கு முனைப்பழியுள்ள அபிப்பிராயமும் மற்றும் ஒரு செயற்குழுவிற்கு மறுப்பு அபிப்பிராயமும் வெளியிடப்பட்டுள்ளதுடன், முனைப்பழியுள்ள அபிப்பிராயம் மற்றும் மறுப்பு அபிப்பிராயத்திற்கு காரணமாகயிருந்த பொருண்மையான பிறழ்வுகள் பின்வருமாறு.

### 1.3 நிதிக் கூற்றுக்கள்

### 1.3.1 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்கள் உள்ளடங்களாக கணக்கீட்டு கொள்கைகளுடன் இணக்கமின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 கமநல சேவை செயற்குழுக்களில் இலங்கை பொதுத் துறை நியமங்களிற்கு இணங்க நிலையான சொத்துக்களின் கிரயம், ஆண்டின் சேர்ப்பனவு, வெளியேற்றல்கள், வருடாந்த பெறுமானத் தேய்வு மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு ஏற்பாடு மற்றும் தேறிய பெறுமதி வெவ்வேறாக காண்பிக்கப்படும் வகையில் அட்டவணைகள் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பித்து இருக்கவில்லை. | 2025 ஆண்டில் தயாரிக்க நடவடிக்கை எடுப்பதெனை. | கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுத்து முறையானவாறு தகவல்கள் சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஆ) | 08 கமநல சேவை செயற்குழுக்களில் மீளாய்வாண்டில் ஏக்கர் வரி வருமானம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | திணைக்களம் வழங்கிய படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டதாக மற்றும் எதிர்வரும் கணக்கறிக்கையை சரியாக தயாரிக்க நடவடிக்கை எடுப்பதெனை. | அட்டுறு அடிப்படையில் கணக்குகள் தயாரிக்க வேண்டும். |

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 கமநல சேவை செயற்குழுக்களில், மீளாய்வாண்டிற்குரிய பெறுமானத் தேய்வு செலவு ரூபா 129,213 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 03 கமநல சேவை செயற்குழுக்களில், பெறுமானத் தேய்வு செலவு ரூபா 72,428 தொகை கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்து. | எதிர்வரும் கணக்காண்டில் செம்மையாக்கம் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | சரியான பெறுமானத் தேய்வு பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்க வேண்டும். |
| (ஆ) | 17 கமநல சேவை செயற்குழுக்களில் செயற்குழுவிற்கு சொந்தமான காணிகளின் மற்றும் கட்டிடங்களின் பெறுமதியை மதிப்பிட்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | காணி மற்றும் கட்டிடங்களை மதிப்பீடு செய்வதனை முகாமைத்துவத்தின் அறிவுரையின் மீது மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | முகாமைத்துவத்தின் அறிவுரையை விரைவில் பெற்றுக்கொண்டு காணி மற்றும் கட்டிடங்களை மதிப்பிட்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | நில்தண்டாஹின்ன மற்றும் கந்தபொல கமநல சேவை நிலையங்களில் 2023 ஆண்டின் கணக்காய்வு ஐயவினாவின் மீது திரண்ட நிதியத்திற்கு செம்மையாக்க வேண்டிய ரூபா 307,744 தொகை செம்மையாக்கப்பட்டு இருக்கவில்லை. | சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | குறித்த குறைபாடுகளை சரிசெய்வதற்காக முறையானவாறு திரண்ட நிதியத்திற்கு செம்மையாக்க வேண்டும். |
| (ஈ) | கரலியத்த மற்றும் கிணிகத்ஹேன கமநல சேவை செயற்குழுக்களில் மீளாய்வாண்டிற்குரிய கமநல வங்கி பங்கிலாபம் கூட்டுத் தொகை ரூபா 269,620 தொகை கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் கணக்காண்டில் செம்மையாக்கம் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | நிதிக்கூற்றுக்களில் சரியாக செம்மையாக்க வேண்டும். |
| (உ) | முங்வத்த கமநல சேவை செயற்குழுவின் 2024 ஆண்டில் ரூபா 292,881 ஆன நிலையான சொத்து கொள்வனவு ஆரம்ப மீதியாக இனங்காணப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுப்பதென. | -மேற்படி- |
| (ஊ) | முங்வத்த கமநல சேவை நிலையத்தில் சொத்துக்களை வாடகைக்கு வழங்குவதன் மூலம் ரூபா 143,700 தொகை வருடாந்த வருமானம் பெறும் சொ்துக்கள் நிலையான சொத்தாக நிதிக்கூற்றுக்களில் இனங்கண்டிருக்கவில்லை. | சொத்துக்களை நிலையான சொத்தாக கணக்கீடு செய்ய எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதென. | குறித்த நிலையான சொத்துக்களின் பெறுமதியை மதிப்பிட்டு நிலையான சொத்தாக கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | முங்வத்த கமநல சேவை நிலையத்தில் கமநல வங்கியிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 579,180 ஆன இலாபப் பங்கை கமநல வங்கி நிதிநிலைமை கூற்றில் செலுத்த வேண்டிய பெறுமதியாக இனங்கண்டிருக்கவில்லை. | ஊக்குவிப்பு படிகள் ஒதுக்கத்தின் கீழ் காட்டியுள்ளதென. | நிதிக்கூற்றுக்களில் சரியாக செம்மையாக்க வேண்டும். |
| (ஏ) | 04 கமநல சேவை செயற்குழுக்களில் ரூபா 184,800 தொகை மீள் அனுப்புதல் மற்றும் ரூபா 240,700 ஆன இருப்பு விட்டுவிடுதலும், ரூபா 133,255 தொகையான இருப்பு குறைவாக காண்பித்தல் மற்றும் ரூபா 111,120 ஆன ஏக்கர் வரி வருமானம் கூடுதலாக காண்பித்லும் காணப்பட்டன. | சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென | -மேற்படி- |
| (ஐ) | 15 கமநல சேவை செயற்குழுக்களில் உபயோக பதிவேடுகள் மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கு இடையே ரூபா 8,040,245 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | தவறை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென | உபயோக பதிவேடுகள் மற்றும் நிதிக்கூற்றுக்களிற்குஇடையே வித்தியாசத்தை இணக்கி சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.3.3 தொங்கல் கணக்கு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மந்தாரம்நுவர கமநல சேவை செயற்குழுவில் ரூபா 172,373 ஆன வரவு தொங்கல் மீதியை தீர்த்திருக்கவில்லை. | சுரிசெய்வதற்கான அறிவுரை பிரதான அலுவலகத்திலிருந்து கோரப்பட்டுள்ளது. | மீதியை இனங்கண்டு விரைவில் தீர்க்க வேண்டும். |

**1.3.4 கணக்காய்விற்காள எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 14 கமநல சேவை செயற்குழுக்களில் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி நிதிக்கூற்றுக்களில் காட்டியுள்ள கூட்டுத் தொகை ரூபா 17,777,019 ஆன 120 சொத்து மீதிகளின் மற்றும் கூட்டுத் தொகை ரூபா 18,226,586 ஆன 72 பொறுப்பு மீதிகளிற்குரிய நிலையான சொத்து பதிவேடுகள், மீதி உறுதிப்பாடுகள், காலப் பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாததால் அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | தேவையான சான்றுகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதென. | நிலையான சொத்து பதிவேடுகளை பேணிக்கொள்ள வேண்டியதுடன் சொத்து மற்றும் பொறுப்பு உறுதிப்பாட்டிற்குரிய சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நுவரெலிய கமநல சேவை செயற்குழுவில் ரூபா 20,052,160 பெறுமதியான 23 வவுசர்களிற்கான கொடுப்பனவை உறுதி செய்வதற்குரிய பட்டியல்கள், சான்றாக சமர்ப்பித்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் வவுசர்கள் தொடர்பாக செயற்படும் போது கவனத்திற் கொள்ளுமாறு முகாமைத்துவ உதவியாளரிற்கு அறிவுரை வழங்கியுள்ளதென. | குறித்த பட்டியல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவும், முறைகேடாக செயற்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதனையும் மேற்கொள்ள வேண்டும். |

**1.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1982 இன் 43 ஆம் இலக்க நிதி சட்ட ஏற்பாடுகளிற்கு மற்றும் 2008 சனவரி 01 திகதி வெளியிடப்பட்ட 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை கட்டண (விசேட ஏற்பாடு) சட்டம். | ரூபா 25,000 இற்கு அதிக கொடுப்பனவுகளிற்கு ரூபா 25 ஆன முத்திரை கட்டணம் அறவிட வேண்டிய போதும்,ரூபா 136,001,739 பெறுமதியான 462 சந்தர்ப்ப கொடுப்பனவுகளிற்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 11,550 ஆன முத்திரைக் கட்டணம் அறவிட்டிருக்காததுடன் மீளாய்வாண்டிற்கு முன்னரான ஆண்டுகளிலும் குறித்த முத்திரை கட்டணம் அறவிட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்தின் அறிவுரை பிரகாரம் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | விரைவாக முயற்ச்சி எடுத்து சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(2) பிரிவு | 22 கமநல சேவை செயற்குழுகளின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | ஏதிர்காலத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதென. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 56 ஆம் பந்தி | 10 கமநல சேவை செயற்குழுக்களில் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 350,620 ஆன நிலுவை ஏக்கர் வரி அறவிட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டின் போது அறவிட நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டியதுடன் காலரீதியாக அறவிடநடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நி.பி 110 | 16 கமநல சேவை செயற்குழுக்களில் சேதம் மற்றும் நட்டம் தொடர்பான பதிவேடுகள் நடாத்திச் சென்றிருக்கவில்லை. | பதிவேடுகளை தயாரிக்க நடவடிக்கை எடுப்பதெனை. | நிதிப்பிரமாண ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்து குறித்த பதிவேடுகளை பேணிக் கொள்ளவேண்டும். |
| (உ) | கமநல சேவை ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை | | | |
| | i. 1981 ஒக்டோபர் 16 ஆம் திகதிய 107 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 21.2 பந்தி | இருப்பு புத்தகங்களை குறைந்தபட்சம் இரண்டு வாரங்களிற்கு ஒரு முறையாவது நிறைவேற்று செயலாளரினால் பரீட்சித்துப் பார்த்து மீதி சரியென உறுதி செய்ய வேண்டிய போதும், 22 கமநல சேவை செயற்குழுக்களில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதெனை. | சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அவ்வாறு செய்யாதமை தொடர்பாக குறித்த உத்தியோகத்தர் களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | ii. 2014 ஒக்டோபர் 22 ஆம் திகதிய 07/2014 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 12 ஆம் பந்தி | செயற்குழு ஒன்றில் அன்றாடம் நிறுத்தி வைக்க இயலுமான கையிருப்பு எல்லையை விஞ்சி 474 சந்தர்ப்பங்களில் ரூபா 10,023 முதல் ரூபா 614,231 வரை தொகை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | எல்லையினுள் இருப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதெனை. | -மேற்படி- |
| | iii. 2000 ஜூன் 06 ஆம் திகதிய 518/2000 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03 பந்தி மற்றும் 2012 பெப்ரவரி | 22 செயற்குழுக்களில் கமநல வங்கிகளின் நிதிக்கூற்றுக்கள் கமநல சேவை செயற்குழுவின் நிதிக்கூற்றுடன் இணைத்திருக்கவில்லை. | உரிய அறிவுரை வழங்கப்பட்டிருக்க வில்லை என. | சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| 29 ஆம் திகதிய 04/2012 இலக்க கமநல வங்கி (முன்மாதிரி) கருத்திட்ட சுற்றறிக்கையின் 5.6(i) பந்தி | | | |
| iv. 2022 திசெம்பர் 13 ஆம் திகதிய 04/2012 ஆம் இலக்க (திருத்திய VII சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவு) | அன்றாடம் கையிருப்பில் வைத்திருக்க இயலுமானரூபா 50,000 எல்லையை விஞ்சிய 14 கமநல வங்கிகளில் 364 சந்தர்ப்பங்களில் ரூபா 50,094 முதல் ரூபா 2,088,912 வரையான காசு கையிருப்பில் வைத்திருக்கப்பட்டன. | எதிர்காலத்தில் எல்லையை விஞ்சாதிருக்க குறித்த உத்தியோகத்தர்களை அறிவுருத்தப்பட்டனர் என. | சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் செய்யப்படாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| v. 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய 04/2012 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.4.2 ஆம் பந்தி | விவசாய கடனை தீர்க்கும் உச்ச கால எல்லை 06 மாதங்கள் ஆன போதும், 05 கமநல சேவை செயற்குழுக்களில் 329 விவசாயிகளிற்கு 1998 பெறும் போகம் முதல் 2023 சிறு போகம் வரையான காலத்தினுள் வழங்கப்பட்ட கூட்டுத் தொக ரூபா 10,946,027 ஆன விவசாய கடனை அறவிட்டிருக்கவில்லை. | அறவிட நடவடிக்கை எடுப்பதென. | காலரீதியாக கடனை அறவிடப்படாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் கடன் மீதியை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| vi. 2023 திசெம்பர் 11 ஆம் திகதிய 12/2018 ஆம் இலக்க திருத்தம் 01 சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் i மற்றும் ii | பெறுமதி ரூபா 100,000 இற்கு அதிக குழு பயன்பாடுகளை கொள்வனவு செய்வதற்காக மற்றும் ரூபா 200,000 இற்கு அதிக மீள் விற்பனை செய்யும் அடிப்படையில் கொள்வனவு செய்வதற்காக கொடுப்பனவு செய்யும் போது கமநல அபிவிருத்தி பிரதி/உதவி ஆணையாளரின் குருங் கையெழுத்து இடப்பட வேண்டிய போதும், 03 கமநல செயற்குழுக்கள் மூலம் 03 சந்தர்ப்பங்களில் ரூபா 158,000 - ரூபா | ஏதிர்காலத்தில் சரியாக நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு இணங்க வேண்டியதுடன் அவ்வாறு இணங்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 500,000 வரை கொடுப்பனவு செய்யும் போது அவ்வாறு குருங் கையொப்பம் பெற்றிருக்கவில்லை. | | |
| (ஊ) | 1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | 19 கமநல சேவை செயற்குழுக்களில் நிலையான சொத்து பதிவேடுகள் நாளாதுவரையாக நடாத்திச் சென்றிருக்கவில்லை. | நிலையான சொத்து பதிவேட்டை தயாரிக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதெனை. | சுற்றறிக்கை பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்றை பேணிக் கொள்ள வேண்டும். |
| (எ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை – 2006 3.4 ஆம் பந்தி | 14 கமநல சேவை செயற்குழுக்களில் ரூபா 73,327,059 ஆன விவசாய பொருட்கள் மற்றும் உபகரணங்கள் பெறுகைகள் செயன்முறையை பின்பற்றாது கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | 2023.10.25 திகதிய க.அ.ஆ. நாயகத்தின் க.சேவை.செயற்கு மு நிதி பயன்பாடு தொடர்பாக வெளியிட்டுள்ள கடிதம் பிரகாரம் நடவடிக்கை எடுத்துள்ளதாக மற்றும் முகாமைத்துவத்தின் அறிவுரை மீது மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதெனை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் இணங்காத உத்தியோகத்தர் களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

நுவரெலிய மாவட்டத்தின் 21 கமநல சேவை செயற்குழுக்களில் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகளின் கூட்டுத் தொகை ரூபா 6,846,587 ஆன மிகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் 13 செயற்குழுக்களின் ரூபா 3,538,827 தொகையான மிகையும் அதற்கு எதிராக 08 செயற்குழுக்களின் ரூபா 813,166 ஆன பற்றாக்குறையும் காணப்பட்டது. ஒரு கமநல சேவை செயற்குழுவின் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 191,092 பற்றாக்குறை ஆனதுடன், அதற்கு நேரொத்த அந்த செயற்குழுவின் முன்னைய ஆண்டில் ரூபா 143,750 ஆன பற்றாக்குறையுமானது. மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்துள்ள 22 கமநல வங்கிகளின் நிதி விளைவுகளின் மிகை ரூபா 9,511,390 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 8,228,658 ஆனது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி முகாமைத்துவ

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 கமநல சேவை செயற்குழுக்களினால் நடைமுறை கணக்குகளிற்குரிய காசோலை | காசோலை கையொப்பமிடும் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் தனிப்பட்ட | உள்ளக நிதிக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்காக |

| | | | |
|---|---|---|---|
| | புத்தகங்களில் 11 வெற்றுக் காசோலைகளில் கையொப்பம் மாத்திரம் இட்டு அலுவலகத்தில் வைத்துள்ளதால் அந்த செயற்குழுக்களில் உள்ளக நிதிக் கட்டுப்பாடு பலவின மட்டத்தில் காணப்பட்டது. | தேவைகளின் மீது பிரதேசத்திற்கு வெளியில் இருந்ததனால் காசோலைகளை கையொப்பமிட்டு பெற்றிருந்ததென. | முறையாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | விற்பனை செய்து பணம் செலுத்தும் அடிப்படையில் 14 கமநல சேவை செயற்குழுக்களில் விவசாய ஆராய்சி உற்பத்தி உதவி அலுவலர்களிடமிருந்து 2023 திசெம்பர் 31 வரையும் அறவிட வேண்டிய தொகையிலிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை ரூபா 3,458,231 ஆன தொகையை அறவிட்டிருக்கவில்லை. | குறித்த அலுவலர்களை அறிவுருத்தியுள்ளதென. | காலரீதியாக பணம் செலுத்த்தாத அலுவலர்கள் தொடர்பாக முறையாக நடவடிக்கை எடுக்கவும், நிலுவை தொகையை விரைவில் அறவிடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 கமநல சேவை செயற்குழுக்களில் ரூபா 109,048 ஆன இருப்பு காலாவதியாகி இருந்தது. | பொருட்களை மீள் கையளிக்க நடவடிக்கை எடுப்பதென மற்றும் பராதீனம் செய்ய நடவடிக்கை எடுப்பதென. | சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தவும்காலாவதியான இருப்புக்களை முறையாக பராதீனம் செய்வதனையும் மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | கந்தப்பொல கமநல சேவை நிலையத்திற்குரிய சுற்றுலா விடுதியில் சில அலுவலர்கள் மற்றும் நபர்களிற்காக கட்டணம் அறவிடப்படாது மற்றும் அலுவலர்களின் அறிமுகத்தின் மீது கட்டணம் அறவிடாது அறைகளை வாடகைக்கு வழங்கியுள்ள 06 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | மாவட்ட அலுவலகத்தின் அறிவுரையின் மீது இந்த பணிகள் மேற்கொள்ளப்படுவதென. | சுற்றுலா விடுதிகளை ஒதுக்குவதற்காக உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை போன்றே நிகழ்நிலை முறைமையொன்றை இஸ்தாபிக்க வேண்டியதுடன் இனங்காணப்பட்டசந்தர்ப்பங்களிற்கு உரியதாக அறவிட வேண்டிய கட்டணத்தை பொறுப்புவாய்ந்த தரப்பினர்களிடமிருந்து அறவிட வேண்டும். |

**3.3 முகாமைத்துவ செயற்திறமையின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 17 கமநல சேவை செயற்குழுக்கள் பயன்படுத்தும் காணிகள் மற்றும் கட்டிடங்களின் உரிமையை செயற்குழுவிற்கு சுவீகரித்திருக்கவில்லை. | சுவீகரிப்பு மேற்கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதென. | சொத்துக்களின் உரிமையை சுவீகரிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மந்தாரம்நுவர செயற்குழுவினால் பயன்படுத்திவரும் நகரிற்கு அண்மையில் 250 சதுரஅடி அளவான கட்டிடமொன்று மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் பயிர்செய்கை சட்டத்தின் கீழ் விதுலிபுற கமநல சேவை செயற்குழுவிற்கு ஒப்படைத்துள்ள அழுஒய பிரதேசத்தில் காணப்படும் 2 ஏக்கர் அளவான காணியும் கட்டிடம் மற்றும் ஹெல்பொட கமநல சேவை செயற்குழுவிற்கு சொந்தமான ரம்பொடகம் பிரிவில் காணப்படும் ஏ தரத்தின்3.5 பர்சஸ் வயல் காணியில் ஒரு வெளித்தரப்பினரால் பலவந்தமாக பயன்படுத்தப்பட்டுவருவதாக அவதானிக்கப்பட்டது. | குறித்த தரப்பினரை அறிவுரித்தியுள்ளதாக மற்றும் எதிர்காலத்தில் சுவீகரிக்க நடவடிக்கை எடுப்பதென. | உரிமையை உறுதி செய்து குறித்த ஆதனங்களை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும. |
| (இ) | விதிலிபுற கமநல சேவை செயற்குழுவிற்கு சொந்தமான திக்ஒய நகரில் அமைந்துள்ள கடையறையின் மற்றும் கரல்லியத்த கமநல சேவை செயற்குழுயின் உடமையில் காணப்படும் ஹிகுங்ராகடுவ மற்றும் உடவத்த பசளை களஞ்சியங்களின் உரிமையை செயற்குழுவிற்கு சுவீகரிக்க தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுவீகரிக்க எதிர்காலத்தில் எதிர்பார்ப்பதென. | குறித்த ஆதனங்களை முறையாகசுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 22 கமநல செயற்குழுக்களில் விவசாய ஆராய்சி உதவி அலுவலர்களிற்காக விவசாய பொருட்கள் மற்றும் உபகரணங்களை விற்பனை செய்வதற்காக வழங்கியுள்ள இலக்கை அடைந்து கொள்ளல் குறைந்தபட்ச நிலைமையில் காணப்பட்டது. | எதிர்வரும் ஆண்டினுள் அனைத்து இலக்கை பூரணப்படுத்துமாறு அலுவலர்களை அறிவுருத்தியுள்ளதென. | முறையான மேற்பார்வை மற்றும் பின்தொடர் நடவடிக்கை மேற்கொண்டு அலுவலர்களிடமிருந்து இலக்கை உச்ச அளவில் அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 செயற்பாட்டு திறமையின்மைகள்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 ஆம் திகதிய 07/05/12/க.அ/தா.கோ இலக்க கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் கடிதம் பிரகாரம் செயற்பட்டு 12 கமநல சேவை செயற்குழுக்களில் நீண்ட காலமாக | தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதென. | விரைவில் தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலவிவரும் கூட்டுத் தொகை ரூபா 3,712,556 ஆன 79 பெற வேண்டிய மீதிகள் மற்றும் கூட்டுத் தொகை ரூபா 8,163,024 ஆன 96 பொறுப்பு மீதிகள் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 22 கமநல சேவை நிலையங்களின் நிலுவை கணக்காய்வு கட்டணம் ரூபா 382,275 தொகை மீளாய்வாண்டு இறுதிவரை செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கணக்காய்வு கட்டணத்தை செலுத்த நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை கட்டணத்தை செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.5 வெளிப்படையான முறைகேடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நுவரெலிய கமநல வங்கிக்கு சொந்தமான அன்னளவாக ரூபா 2,213,000 தொகையை தவறாக பயன்படுத்தியமை, போலியான ஆவணங்களை தயாரித்தல் மற்றும் அதிகாரத்தை விஞ்சி கொடுப்பனவு செய்தமை ஆகிய முறைப்பாடுகள் காரணமாக 2021 சனவரி 12 திகதி முதல் கமநல வங்கிக்கு இணைக்கப்பட்ட விவசாய அராய்சி உற்பத்தி உதவியாளரின் பணித் தடை செய்யப்பட்டிருந்தது. எனினும் இது தொடர்பாக 2025 மே 22 கணக்காய்வு திகதி வரையும் நிதிப் பிரமாணம் 104 பிரகாரம் விசாரணை ஒன்றை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்திருக்காததுடன், நிதிப்பிரமாணம் 119 இல் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளிற்கு மாற்றமாக மாவட்ட அலுவலகத்தின் மூலம் அந்த அலுவலர்களினது மாதாந்த சம்பளத்திலிருந்து ரூபா 28,000 வீதம் ரூபா 314,000 தொகை பணித் தடைக்கு முன்னர் அறவிடப்பட்டிருந்தது. அத்தொகையை கமநல வங்கிக்கு வழங்க வேண்டிய போதும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றினுள் அப் பெறுமதி நடைமுறை பொறுப்பின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறே முறைகேடாக பயன்படுத்திய தொகையாக இனங்கண்டிருந்த ரூபா 2,213,000 ஆன பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக 2021 திசெம்பர் 27 திகதிய NUE/A/AGG/நுஎ/2021/35/(1), 2022 | வவுசர்களை குறைபாடின்றி சமர்ப்பிக்குமாறு உரிய அறிவுரை வழங்கியுள்ளதென. | முறையாக விசாரணையை நடாத்தி நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்து குறித்த தொகையை அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒக்டோபர் 31 திகதியNUE/A/AGG/நுள/2022/16/(1) இலக்க மற்றும் 2023 ஜூலை 21 திகதிய CPCG/NE/B/AGG/NE/2023/23 இலக்க கயக்காய்வு ஐயவினாகளின் மூலம் விடயங்களை குறிப்பிட்ருந்த போதும், இதுவரை இந்த முறைகேடான நிதி பயன்பாடு தொடர்பாக ஓழுங்கான விசாரணை அறிக்கையை சமர்ப்பித்திருக்கவில்லை. | | |
| (ஆ) | ரூபா 100,000 இலும் அதிக செயற்குழு உபகரணங்களை பெற்றுக் கொள்ள கொடுப்பனவிற்கான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள கமநல சேவை பிரதி ஆணையாளரிற்கு வவுசர்களை சமர்ப்பிக்க வேண்டிய போதும் கினிகத்ஹேன கமநல சேவை செயற்குழு ரூபா 280,000 இற்கு ‘‘ஷாப்’’ வகையான பிரதியிடல் இயந்திரமொன்றை கொள்வனவு செய்யும் போது ரூபா 82,000 தொகை முற்பணம் செலுத்துதல் எனவும் எஞ்சிய தொகை ரூபா 198,000 எனவும் இரண்டு காசோலைகள் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கெலிஓயவில் அமைந்துள்ள நிறுவனமொன்றில் இருந்து கொள்வனவு செய்த ‘‘ஷாப்’’பிரதியிடல் இயந்திரத்தை மீண்டும் வழங்கினரிற்கு வழங்கி அதற்காக ரூபா 280,000 தொகை பெறப்பட்டிருந்தது. நிறுவனத்தில் தற்போது பயன்படுத்தப்படும் ‘‘ரிகோ’’ பிரதியிடல் இயந்திரத்திற்காக 2024 ஆண்டில் வவுசர் பத்திரமும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அதன் பிரகாரம் கெலிஓய வழங்குனரின் பணத்தை பெற்று அத்தொகைக்கு ‘‘ரிகோ’’ பிரதியடல் இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக எவ்வித பெறுகை ஆவணங்களும் நிறுவனத்திடம் இருக்கவில்லை. | கெலிஓயவில் அமைந்துள்ள நிறுனத்திடம் புதிய இயந்திரமொன்றை பெற்றுக் கொண்டதாக மற்றும் எவ்விதத்திலும் நிதி ரீதியான கொடுக்கல் வாங்கலும் இடம்பெறவில்லை எனவும் அவ்வாறான கொள்வனவு தொடர்பாக மேற்குறித்த அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் முறையற்றதாக கொள்வனவு செய்வது தொடர்பாக குறித்த தரப்பினர்களிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | நுவரெலிய கமநல சேவை செயற்குழுவிற்கு சொந்தமாக இருந்த 03 அடியிதழ் புத்தகங்கள் 2021 ஜுன் மாதம் 14 ஆம் திகதி காணாமல் போயுள்ளதாக நிலைய முகாமைத்துவ உதவி அலுவலரினால் 2021 ஜுன் 17 திகதி கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரிற்கு கடிதம் மூலம் | விசாரணையொன்று நடைபெற்று வருகின்றது. | முறையான விசாரணை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறிவித்திருந்ததுடன், காணாமல் போன பற்றுச்சீட்டு புத்தகங்கள் மூலம் திரட்டியிருந்த தொகை ரூபா 1,437,903 ஆனது. இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு தேவையான நடவடிக்கைகளை 2025 ஜூன் 30 திகதி வரை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஈ) | விதுலிபுர கமநல சேவை நிலையத்தில் விழா முற்பணம் பெலுத்தும் போது மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட 04 அலுவலர்களின் பெயர்கள் மற்றும் பணம் பெற்றுக் கொண்ட 04 அலுவலர்களின் பெயர்களிற்கு இடையே வித்தியாசம் அவதானிக்கப்பட்டதுடன், பணம் பெற்றுக் கொண்டமைக்காக கையொப்பமிட்ட 02 அலுவலர்களின் கையொப்பம் வெட்டப்பட்டிருந்ததுடன் அந்த இரண்டு அலுவலர்களில் ஒருவர் 2023 ஆண்டில் இடமாற்றம் பெற்று சென்ற அலுவலர் ஒருவராவார். | இருவர்களின் பெயர்கள் இல்லாததால் பின்னர் அப்பெயர்களிற்கு பதிலாக இருக்கின்ற அலுவலர்களை உள்ளடக்கியுள்ளதாக மற்றும் குறைபாகளை எதிர்காலத்தில் நிவர்த்திக்க நடவடிக்கை எடுப்பதென. | அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டு கடமையாற்றுவதனை உறுதி செய்து கொண்டு கொடுப்பனவு செய்ய வேண்டியதுடன் கொடுப்பனவு செய்வது தொடர்பான உள்ளக கட்டுப்பாட்டை வலுப்படுத்த வேண்டும். |
| (எ) | கமநல சேவைகள் திணைக்களத்தின் பிரதி மற்றும் உதவி ஆணையாளர்களின் 2024 மே 03 மற்றும் 04 திகதிகளில் நடாத்தப்பட்ட மாநாட்டிற்கு கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளர், நுவரெலியவின் 2024 ஏப்ரல் 22 திகதிய கடிதம் பிரகாரம் கமநல சேவை செயற்குழுவின், கடமைகள் மற்றும் பணிகளிற்கு இணங்காத மாநாட்டின் செலவுகளை மேற்கொள்ள ரூபா 945,000 தொகை 12 கமநல சேவை நிலையங்களிடமிருந்தும் விவசாய அபிவிருத்தி அதிகார சபை மூலம் ரூபா 200,000 தொகையும் தனியார் கம்பனி மூலம் ரூபா 378,000 தொகை மற்றும் விதுலிபுர கமநல சேவை நிலைய அலுவலர்கள் மற்றும் விவசாயிகளிடமிருந்து தனிப்பட்ட விதத்தில் ரூபா 30,000 தொகையாக மொத்த பெறுமதி ரூபா 1,553,000 தொகையை திரட்டி மாநாட்டு செலவுகளை மேற்கொள்ள செலவிடப்பட்டிருந்தது. | உண்மையாக கூட்டத்தை நடாத்திச் செல்ல வழங்கிய தொகையென மற்றும் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளரின் அறிவுரை மீது நடவடிக்கை எடுத்துள்ளதென. | முறையான விசாரணையொன்றை நடாத்தி குறித்த தரப்பினரிற்குநடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மந்தாரம்நுவர கமநல சேவை செயற்குழுவினால் சேதன பசளை உற்பத்திக்காக பயன்படுத்துவதற்கு 2021 செப்டம்பர் 27 ஆம் திகதி ரூபா 165,000 செலவில் கொள்வனவு செய்திருந்த கமநல நண்பன் இயந்திரம் கணக்காய்வு திகதியான 2025 ஜுலை 03 ஆம் திகதி வரையும் விளைவற்று காணப்பட்டது. | திணைக்களத்தினால் வழங்கும் அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுப்பதென. | தேவைப்பாட்டை இனங்கண்டு கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் இயந்திரத்தை பயன்படுத்துவதற்கு வேலைதிட்டமொன்றை இட வேண்டும். |
| (ஆ) | தொழிநுட்ப உத்தியோகத்தரின் பரிந்துரை இன்றி மந்தாரம்நுவர கமநல சேவை நிலையத்தில் மரத்தள கம்பு இடுவதற்காக ரூபா 193,750 தொகை செலவிடப்பட்டிருந்தது. | தேவையான அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதென. | முறையான பரிந்துரையின் கிழ் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | பூண்டுலுஓய கமநல சேவை செயற்குழுவினால் வாடகை அடிப்படையில் வழங்கும் வாகன சாலை கட்டிடத்தை மற்றும் பொஜுன் உணவக கட்டிடத்தை ரூபா 75,730 செலவிட்டு மீளாய்வாண்டில் திருத்தி இருந்த போதும், விளைவற்று காணப்பட்டது. | எதிர்வரும் ஆண்டினுள் அக் கட்டிடத்தை வாடகை அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுப்பதென. | சொத்துக்களை பயன்படுத்தி வருமானம் ஈட்டிக்கொள்ளும் முறையான வேலைத்திட்டமொன்றை தயாரிக்க வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பு மற்றும் நல்லாட்சியும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1981 ஒக்டோபர் 16 ஆம் திகதிய 107 ஆம் இலக்க கமநல சேவை ஆணையாளரின் சுற்றறிக்கையின் 30 ஆம் பந்தியின் 3 ஆம் பரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 08 செயற்குழுக்களில் உரிய திகதியை விஞ்சி 01 முதல் 03 மாதங்களுக்கு இடைப்பட்ட காலம் தாமதித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் கணக்காண்டில் உரிய திகதிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுத்து உரிய திகதிக்கு நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்க வேண்டும். |

**5.** **கமநல வங்கி**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வலபனே கமநல சேவை செயற்குழுவின் விசேட கருத்திட்ட கடனின் கீழ் 2016 ஆண்டில் விவசாய் ஒருவருக்கு விடுவித்த ரூபா 500,000 கடன் தொகையில் இருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை எந்தவொரு தொகையையும் அறவிட்டிருக்கவில்லை. | சட்ட செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை கடன் மீதியை அறவிடவும், கடன் வழங்குதல் மற்றும் அறவிடப்படாமை தொடர்பாக முறையான விசாரணையொன்று மேற்கொண்டு உரிய முன் நடவடிக்கை எடுப்பதனை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | கமநல சேவை செயற்குழு 15 இல் 836 விவசாயிகளிடமிருந்து ரூபா 28,950,010 ஆன நிலுவை கடன் தொடர்பாக கமநல தீர்ப்புச் சபையினால் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கமநல தீர்ப்புச் சபைக்கு சமர்ப்பித்து நிலுவை கடனை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | -மேற்படி- |
| (இ) | கமநல சேவை செயற்குழு 02 இல் 09 விவசாயிகளிற்கு வழங்கியுள்ள சிதமு முயற்சிக் கடன் ரூபா 249,084 தொகையையும் கமநல சேவை செயற்குழு 03 இல் 27 விவசாயிகளிற்கு வழங்கியுள்ள விவசாய உபகரணக் கடன் ரூபா 468,662 தொகையையும் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | தீர்ப்புச் சபைக்கு சமர்ப்பித்துள்ளதென. | -மேற்படி- |
| (ஈ) | கமநல சேவை செயற்குழு 04 இல் 43 விவசாயிகள் மரணித்தல் மற்றும் பிரதேசத்தை விட்டுச் சென்ற காரணத்தால் ரூபா 1,136,522 கடன் செலுத்துதலை புறக்கனித்திருந்ததுடன், அந்தக் கடனை | பிணைதாரரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுப்பதென. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடுவது தொடர்பாக முறையான செயற்பாடுகளை எடுத்திருக்கவில்லை. | | |
| (உ) | கமநல சேவை செயற்குழு 04 இல் 133 விவசாயிகளிற்கு வழங்கிய ரூபா 4,751,794 பெறுமதியான விவசாயக் கடனிலிருந்து எவ்வித தவணையையும் 2024 திசெம்பர் 31 திகதி வரை அறவிட்டிருக்கவில்லை. | கமநல தீர்ப்புச் சபைக்கு மற்றும் நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்துள்ளதென. | -மேற்படி- |
| (ஊ) | கமநல சேவை செயற்குழு 07 இல் 34 வெற்று காசோலைகளில் கையொப்பம் மாத்திரம் இடப்பட்டு கையில்வைத்துக் கொள்ளப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் சரிசெய்து கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | முறையான விசாரணையொன்று நடாத்தி உரிய தரப்பினர்களிற்கு நடவடிக்கை எடுப்பதற்கும்,உள்ளக நிதிக் கட்டுப்பாட்டை வலுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | கமநல சேவை செயற்குழுக்கள் 08 இல் செயற்திட்ட கடன் வழங்கும் போது செயற்திட்ட அறிக்கையை விவசாய ஆராய்சி மற்றும் உற்பத்தி உதவியாளரினால் பரிந்துரைத்திருக்கவில்லை. | சரிசெய்து கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | பரிந்துரை வழங்கப்படாது கடன் வழங்கியஉத்தியோகத்தரிற்குநடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | கமநல சேவை செயற்குழுக்கள் 05 இல் செயற்திட்ட கடனின் கீழ் கால்நடை வளர்ப்பிற்காக கடன் வழங்கும் போது 42 சந்தர்ப்பங்களில் மிருக வைத்தியரின் பரிந்துரை பெறப்பட்டிருக்கவில்லை. | பரிந்துரை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | -மேற்படி- |
| (ஐ) | கமநல சேவை செயற்குழு 22 இல் ரூபா 25,000 இற்கு மேற்பட்ட கொடுப்பனவிற்காக ரூபா 25 முத்திரை கட்டணம் அறவிட வேண்டிய போதும், 2408 சந்தர்ப்பங்களில் கொடுப்பனவிற்கு மீளாய்வாண்டிற்காக ரூபா 60,200 முத்திரை கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | முத்திரை கட்டணத்தில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளதென. | முத்திரை சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | கரல்லியத்த கமநல வங்கி முன்மாதிர கருத்திட்டம் மூலம் கண்டி நீதவான் நீதிமன்றத்தில் 2003 மார்ச் 12 திகதி தாக்கல் செய்யப்பட்ட, கடன் கோவைக்காக ரூபா 79,948 தொகை நீதிமன்றத்திற்கு கிடைத்துள்ள போதும் அத்தொகையை வங்கியிற்கு கணக்காய்வு திகதியான 2025 ஜுன் 30 வரை கிடைத்திருக்கவில்லை. | திணைக்களத்திற்கு அறிவித்துள்ளதுடன் எதிர்காலத்தில் வழங்கப்படும் அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுப்பதென. | குறித்த தொகையை செயற்குழுவிற்கு அழைப்பித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |